Register No. | | | | | | | | |

# FA6A

**5046–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

**CONSTITUTIONAL LAW – II**

Time : $2\frac{1}{2}$ hours                Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Original and Advisory jurisdictions of the Supreme Court of India.

   இந்திய உச்சநீதிமன்றத்தின் முதன்மை மற்றும் ஆலோசனை வழங்கும் அதிகாரங்களை விளக்குக.

2. "Trade and Commerce shall be free throughout India". – Explain how the Indian Constitution seeks to achieve this object.

   ''இந்தியா முழுவதும் வாணிபம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை வேண்டும்'' இந்திய அரசியலமைப்பு சட்டம் எவ்வாறு இந்த இலக்கினை அடைய விழைகிறது என்பதை விவரிக்கவும்.

3. Explain the procedure for amendment of the constitution. What restrictions do the doctrine of basic structure of the constitution place on the amending power of parliament?

   அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை தன்மை கோட்பாடானது எத்தகைய கட்டுப்பாடுகளை நாடாளுமன்றம் அரசமைப்பு சட்டத்தை திருத்தும் அதிகாரத்தின் மீது விதிக்கிறது?

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What do you understand by 'individual responsibility' of a minister? What is meant by collective responsibility?

   ஒரு அமைச்சரின் 'தனிப்பட்ட பொறுப்பு' என்றால் என்ன? கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன?

5. Discuss the qualifications and disqualifications for membership of parliament.

   பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் தகுதியின்மையை விவாதிக்கவும்.

6. Explain how the president exercises the power of pardon.

   மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசு தலைவர் பயன்படுத்தும் முறை குறித்து விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Repromulgation of ordinances again and again

   ஒரே அவசர சட்டத்தை மீண்டும் மீண்டும் பிரகடனப் படுத்துவது

   (b) Power of parliament to make laws in a state list

   மாநில பட்டியலில் பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம்

   (c) Doctrine of Pith and substance

   மையக் கருப்பொருள் கோட்பாடு

   (d) $X^{th}$ Schedule

   10வது அட்டவணை

   (e) Parliamentary privileges

   நாடாளுமன்ற சிறப்புரிமைகள்

   (f) Functions of the Public Service Commission

   அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள்

   (g) Interstate council

   மாநிலங்களுக்கு இடையேயான மன்றம்

## PART D — (6 × 2 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule – Decide.

   இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியில் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

9. A full bench of three judges was constituted by the Supreme Court to interpret the constitution, which decided the case and unanimously. Later the decision was impugned as erroneous and therefore a bench of five judges was constituted to review the case. Discuss the constitutional and jurisprudential requirement of constituting a constitutional bench.

மூன்று நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற முழு நீதியகம் ஒருமனதுடன் அரசமைப்பு பொருள் விளக்க தீர்ப்பு வழங்கியது. பின்னர் அத்தீர்ப்பு செல்லாது எனக் கூறி அதை மறு ஆய்வு செய்ய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு நீதியகம் அமைக்கப்பட்டது. ஒரு அரசமைப்பு நீதியகம் அமைக்கப் பெற தேவையான அரசமைப்பு மற்றும் சட்டவியல் கூறுகளை விவாதிக்க.

10. There were certain allegations made in a newspaper against a sitting judge of the High Court. The matter was raised by an opposition member of the state legislature in the House and the same was clarified by the law minister in the house. The aggrieved judge writes to the speaker to expunge the questions and answer regarding him else he will be constrained to proceed against the house for contempt. Is his threat sustainable in law?

பதவியில் இருக்கும் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக ஒரு பத்திரிக்கையில் வந்த குற்றச்சாட்டுகள் குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுந்து இது குறித்து சட்ட அமைச்சர் விளக்கம் கூறினார். இந்த விவாதம் குறித்து இந்த நீதிபதி சட்டமன்ற தலைவருக்கு இந்த விவாதங்களை அவை குறிப்புகளில் இருந்து நீக்காவிட்டால் அவைகளை நீதிமன்ற அவமதிப்பாக கொள்ளப்படும் என்ற கடிதத்தை அனுப்பியுள்ளார். இந்த செயல் சட்டத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுமா?

---

Register No. | | | | | | | | |

**FA6B** **5047–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

**COMPANY LAW**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is allotment of shares? What are the restrictions on allotment of shares? What is the effect of irregular allotment?

   பங்குகள் ஒதுக்கீடு என்றால் என்ன? பங்குகள் ஒதுக்கீட்டின் மீதான வரம்புகள் யாவை? ஒரு முறையற்ற ஒதுக்கீட்டின் விளைவு யாது?

2. Briefly examine the establishment of Securities and Exchange Board of India and its power and functions.

   இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் ஆக்க அமைப்பு, அதிகாரம் மற்றும் பணிகளைப் பற்றிச் சுருக்கமாக ஆய்வு செய்க.

3. Describe the different kinds of debentures and point out the rights of the debenture holders.

   பலவகைப்பட்ட கடனீட்டு ஆவணங்களை விளக்கி கடனீட்டு ஆவணதாரரின் உரிமைகளைக் குறிப்பிடுக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss briefly the various modes of winding up of a company. What are the effects and consequences of an order of winding up of a company by the Tribunal?

   எந்தெந்த முறைகளில் நிறுமம் கலைக்கப்படலாம் என்பதைப் பற்றி சுருக்கமாக விவாதி. தீர்ப்பாய நிறும கலைப்பு ஆணை ஒன்றின் வாயிலாக ஏற்படும் விளைவுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

5. Briefly explain the salient features of the Companies Act, 2013.

   2013-ம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் சிறப்புக்களை சுருக்கமாக விளக்குக.

6. Define the doctrine of indoor management and state the rules and exceptions of this doctrine.

உட்புற மேலாண்மை கோட்பாட்டினை வரையறை செய்து அதன் விதிகளையும் விதிவிலக்குகளையும் குறிப்பிடுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Corporate Social Responsibility.
வணிக நிறுமங்களின் சமூகப் பொறுப்பு.

(b) National Company Law Tribunal.
நாட்டு நிறுமச் சட்ட தீர்ப்பாயம்.

(c) Fixed charge and Floating charge-Distinguish
நிலையிருப்பு பொறுப்புக்கும், பற்றுப் பொறுப்புக்கும் உள்ள வேறுபாடுகள்.

(d) Memorandum of Association.
அமைப்பு முறையேடு.

(e) Constructive notice.
கொள்நிலை அறிக்கை.

(f) Reconstruction and Amalgamation.
மறு நிருமாணமும், ஒருங்கிணைப்பும்.

(g) Share certificate and share warrant.
பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குப் பணப்பற்றாணை.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. On the failure of the directors of a company to call a meeting on requisition, members themselves sent a notice to all the members for a meeting to be held at the registered office. But the Managing Director (MD) locked the office premises to prevent the holding of the meeting. Hence the meeting was held at other place. Decide the validity of the meeting.

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டத்தைக் கூட்டத் தவறியதால் உறுப்பினர்களே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி நிறுமப் பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தனர். ஆனால் நிறுமத்தின் மேலாண்மை இயக்குநர் கூட்டம் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு அலுவலகத்தைப் பூட்டிவிட்டதால் வேறு இடத்தில் அந்நிறுமத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் செல்லுந்தன்மையினை தீர்மானிக்கவும்.

9. The directors of a company were authorised to make payment towards any charitable objects for any general public. Hence the directors of the company has given Rs.2 lakhs to a trust formed for the promotion of technical and business knowledge. Discuss.

நிறுவனம் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அறச்செயல் நோக்கத்திற்காக பொது மக்களுக்கு பண உதவி அளிக்கலாம் என்று சொல்லப்பட்டது. இயக்குநர்களும் தொழில்நுட்ப பொது அறிவை பெருக்குவதற்காக ஒரு பொறுப்பமைவை உருவாக்கி அதற்கு ரூ.2 இலட்சத்தை அளித்தனர். விவாதிக்கவும்.

10. 'A' a shareholder after appointing 'B' as his proxy to attend a meeting at the company AGM, 'A' himself attended the AGM meeting and voted on a particular resolution Thereafter 'B' claims to exercise his vote. Examine the claims of 'B'.

'அ' என்ற பங்குரிமையாளர் நிறுவனத்தின் AGM கூட்டத்தில் பங்கு கொள்ள 'ஆ' என்பவரை நியமனம் செய்த பிறகு 'அ' என்பவரே அக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்தார். அதன் பிறகு 'ஆ' என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறார். 'ஆ'வின் கோரிக்கையினை ஆராய்க.

**FA6C**

Register No. | | | | | | | | |

**5048–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

**LABOUR LAW – I**

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Who is responsible for payment of wages? What are the deductions permitted under the Payment of Wages Act, 1936?

   ஊதியம் வழங்குவதற்குரியவர் யார்? ஊதியம் வழங்கல் சட்டம் 1936-ல் சொல்லப்பட்டுள்ள கழிவுகள் யாவை?

2. State in what ways minimum rates of wages are fixed and revised under the Minimum Wages Act, 1948?

   1948-ம் ஆண்டு குறும ஊதியச் சட்டத்தில் எம்முறைகளில் குறும ஊதியம் செய்யவும் அவற்றை மாற்றம் செய்யவும் முடியுமென்பதினை எடுத்துரைக்க.

3. What is public utility service? What are the restrictions on strike in a public utility service?

   பொது பயன்பாட்டுச் சேவை என்றால் என்ன? பொதுப் பயன்பாட்டுச் சேவை ஒன்றில் வேலை நிறுத்தம் செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் யாவை?

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the scope of jurisdiction of the Labour court under the Industrial Disputes Act 1947. Refer to cases.

   தொழிலகத் தகராறுகள் சட்டம் 1947-ன் கீழ் தொழிலாளர் நீதிமன்றத்தின் ஆள்வரை நோக்கெல்லையை வழக்குகளுடன் விளக்குக.

5. Explain the procedure for amalgamation and dissociation of Trade Unions.

தொழிற்சங்கங்களை ஒருங்கிணைப்பது மற்றும் கலைப்பது குறித்தான நடைமுறைகளை விளக்குக.

6. "The registered trade union is permitted to two kinds of funds for accomplishing its objectives under the Trade Union Act 1926". Explain.

''தொழிற்சங்கங்கள் சட்டம் 1926ல் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் இருவகைப்பட்ட நிதிகளை ஏற்படுத்தி அதன் நோக்கங்களை நிறைவு செய்து கொள்ளலாம் என அனுமதிக்கிறது'' விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Evolution of concept of master and servant relationship.

பணி வழங்குநர் பணியாள் உறவுமுறை கருத்தமைவின் வளர்ச்சி முறை.

(b) Claims under the Minimum Wages Act, 1948.

குறும ஊதியச் சட்டம் 1948யின் கீழ் கோருரிமைகள்.

(c) Industrial establishment under Payment of Wages Act, 1936.

ஊதியம் வழங்கல் சட்டம் 1936-ன் கீழ் தொழிற்சாலை நிறுவனம்.

(d) Standing orders.

நிலையாணைகள்.

(e) Retrenchment and Lay-off.

ஆட்குறைப்பு மற்றும் நிறுத்தி வைத்தல்.

(f) International Labour Organisation.

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு.

(g) Board of Conciliation.

இசைவிணைக்கக் குழுமம்.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A workman who is laid-off by his employer in his establishment at Trichy refuses to accept an alternative employment in another establishment belonging to the same employer but in Dindigul. Can the workman claim laid-off compensation?

பணி வழங்குநரால் நிறுத்தி வைக்கப்பட்ட, திருச்சியில் பணிபுரியும் பணியாளர் ஒருவர் அதே பணி வழங்குநருக்கு சொந்தமான ஆனால் திண்டுக்கல்லில் உள்ள தொழிலகத்தில் மாற்று வேலை கொடுத்தும் ஏற்க மறுக்கிறார். அத்தொழிலாளி நிறுத்தி வைத்தலுக்கான இழப்பீட்டினை கோர முடியுமா?

9. A workman in an industry was terminated from service by the Management on the ground of his inability to work due to continued ill-health. The concerned workman demanded retrenchment compensation from the management. Decide.

ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு தொழிலாளியை நிர்வாகம் அவரது உடல் நிலை தொடர்ந்து சரியில்லாததால் பணி செய்ய முடியவில்லை என்ற காரணத்தை காட்டி பணி நீக்கம் செய்தது. அத்தொழிலாளி ஆட் குறைப்பிற்கான இழப்பீட்டினை நிர்வாகத்திடம் கோருகிறார். முடிவு செய்க.

10. In a factory employing 999 persons, the wage period has been fixed as one week. An employee in the said factory has not been paid his wages for the week ending 7th March till $12^{th}$ March. Is there any delay in the payment of wages? Explain.

ஒரு தொழிலகத்தில் 999 நபர்கள் பணியில் உள்ளனர். அவர்களது ஊதியக் காலம் ஒரு வாரம் என்று தீர்மானிக்கப்படுகிறது. ஒரு பணியாளருக்கு மார்ச் திங்கள் முதல் வாரம் கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் அம்மாதம் 12-ம் தேதி வரையில் வழங்கப்படவில்லை. ஊதியம் அளிப்பதில் ஏதாவது கால தாமதம் ஏற்பட்டுள்ளதா? விளக்கவும்.